புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி காட்டிய இதய தெய்வம் ஆட்சியில் மற்ற டிபார்ட்மெண்டுகளுக்கு பொதுப்பணித் துறை மூலம் வாடகை நிர்ணயிப்பது போல, அறநிலையத் துறையிலும் புதிய வாடகையை, குத்தகை நிர்ணயம் செய்ய ஆவன செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஒரு விசாரணை நடத்தி, குற்றம் இருப்பின் உடனடியாக அதற்குரிய தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 180, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

180—

நடைபாதைக்கு மேற்கூரை அமைத்தல்

**40268—திரு. செ.து. வரதராஜன்:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருமலைக்கு வெயிலில் படியேறுவது சிரமமாக இருப்பதால் நடைபாதைக்கு மேற்கூரை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருமலையிலுள்ள நடைபாதைக்கு மேற்கூரை அமைக்கும் திட்டம் தற்போதில்லை.

முற்பகல் 11-30

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்பக்கலைக் களஞ்சியமாக, தெய்வமணம் கமழும் இடமாக இந்தியாவிலேயே, ஏன் அகில உலகத்திலேயே தமிழ்நாடுதான் மிகச்

1996 மார்ச் 1]

சிறந்து விளங்குகிறது. பல நூற்றாண்டுக் காலத்திற்கு முன்பு உருவாக்கப்பட்ட இந்தத் திருக்கோயில் பழுதடைந்த நிலையில் உள்ளது. திருக்கோயிலுக்குத் தமிழகம் எங்கும் திருப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நான் தெய்வத்தை நேரில் பார்த்தது இல்லை. தெய்வத் திருத்தலங்களில் திருப்பணிகள் சிறப்பாக டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் நேர்முகப் பார்வையில் செய்வதால் தெய்வமாகவும், தெய்வத் தாயாகவும் பார்க்கிறேன். பல நூற்றாண்டுக் காலமாகப் பெயர் பெற்ற திருக்கழுக்குன்றத்தில், இரண்டு கழுகுகள் குன்றத்திலே வருகை தந்து அருள்மிகு வேதகிரீஸ்வரரைத் தரிசித்து, கோயிலினுடைய பிரசாதத்தைச் சாப்பிட்டுவிட்டுச் செல்லும் அந்தக் காட்சியை நேரில் கண்டால் பிறவியினுடைய பலன் கிடைக்கும் என்பது நம்பிக்கை. இதற்கு பட்சி தீர்த்தம் என்று ஒரு பெயரும் உண்டு. பகல் 10 மணி முதல் 3 மணி வரை மலைப்பாதையில் அயல்நாட்டுக்காரர்களும், வயது முதிர்ந்தவர்களும், பிணியில் உள்ளவர்களும், குழந்தைகளும் காலணி அணியாமல் கடும் வெய்யிலில் செல்வதால் துடிதுடித்து மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்தச் சிறிய பகுதிக்கு, திருப்பதி, திருச்சி மலைவினாயகர் கோயில்களின் நடைபாதைகளிலும் மேற்கூரைகள் அமைத்ததைப்போல அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக்கோயில் ஏறும் படிகளில் ஆறு நிழல் தரும் மண்டபங்களும், இறங்கும் படிகளில் 2 மண்டபங்களும் தற்சமயம் கட்டப்பட்டுள்ளன. தற்போது நிதிநிலைமை சரியில்லாததால், படி முழுமைக்கும் மேற்கூரை அமைக்கும் திட்டம் தற்பொழுது இல்லை.

திரு. செது. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தலைவி, தெய்வத் தாய் திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் கோயிலுக்கு இலட்ச தீபத் திருவிழாவிற்கு 3 இலட்சமும், எரிந்த மரத் தேருக்கு 10 இலட்சமும் வடவண்டை கோபுரம் புதுப்பிப்பதற்கு ரூபாய் 11 இலட்சமும், தென்னண்டை மேலண்டை கோபுரங்களைப் புதுப்பிப்பதற்கு சுமார் 23 இலட்சமும் ஒதுக்கி திருப்பணிகள் சிறப்பாக நடைபெறுகிறது. மலைப்பாதைக்கு மேற்கூரைகள் அமைத்தால் இந்தப் பாடல் பெற்ற திருக்கோயிலின் முழுத் திருப்பணிகளும் முடிவடைகின்ற பலன் கிடைக்கும். அதுவும் இல்லாமல், எங்களுடைய தங்கத்தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, தமிழ்நாடு அரசுத் துறை தற்காலிக அரசு ஊழியர்கள், பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வயது வரம்பு . . . (மணியடிக்கப்பட்டது) நன்றி கூற விரும்புகிறேன்.

கடைசியாக 'கொஸ்டீன்' முடியும்போது தலைவிக்கு நன்றி சொல்கிறேன். பணிபுரிந்து வயது கடந்து, பணிபுரிந்து நிரந்தரமின்றி வாடிய தற்காலிக அரசு ஊழியர்கள் பயன்பெறும் வண்ணம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய, சிறப்புத் தேர்வின் மூலம் பணி நிரந்தரம், இன்னும் அரசாணையின் மூலம் 2,500 ஊழியர்கள் குடும்பங்களுக்கு விளக்கேற்றி வாழ வைத்த எங்களது தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தமிழ்நாடு அரசு தற்காலிக தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்களும் மற்றும் இளநிலை உதவியாளர்கள் சங்கம் சிரம் தாழ்த்தி நன்றி தெரிவித்து கொண்டு, மேலும் தேர்வு முடிவில் விடுபட்ட 1,500 பேர்களை வாழ்விக்க தமிழகத்தினுடைய முதலமைச்சர் தங்கத் தலைவி அவர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரதராஜன், இந்தக் கேள்வி அறநிலையத் துறை அமைச்சர்களுக்குப் போடப்பட்ட கேள்வி.

திரு. செ.து. வரதராஜன்: நன்றி சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தேர்வாணைக் குழு மூலம் தேர்ந்தெடுக்கிற பிரச்சினையை இதிலே இணைத்து நன்றி கூறுவது என்றால் பொருத்தம் இல்லாமல் இருக்கும். நீங்கள் வேதகிரீஸ்வரர் கோயிலோடு நிறுத்துங்கள்.

திரு. செ.து. வரதராஜன்: தெய்வமணம் கமழ்கின்றது இந்த வினா. 10-வது சட்டமன்றத்தில் மிகச் சிறப்பாக நடத்திய தங்கத் தலைவிக்கு நன்றி சொல்லி வாழ்த்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, தெய்வ மணம் கமழ முடித்ததற்கு நன்றி. (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயில் 'பட்சிதீர்த்தம்' என்று பெயர் பெற்று வழங்கப்படுகிறது. பன்னெடுங்காலமாக தினந்தோறும் பட்சிகள் வந்து, பூஜை செய்யப்பட்ட அன்னத்தை எடுத்துக் கொள்வதைப் பக்தர்கள் திரளாகச் சென்று தரிசிக்கிறார்கள். இப்படிப்பட்ட சிறப்பு இந்தப் பட்சிகள் இங்கு வருவதால்தான். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் போல படிகள் நெடுகெங்கிலும் மேற்கூரை அமைத்திட்டால், மலையின் தோற்றம் மாறி அந்தப் பறவைகள் வருகையும் தடைப்பட்டு விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. இதுசம்பந்தமாக பறவை ஆராய்ச்சியாளர்களின் கருத்தறிந்து,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

துறையின் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு மாண்புமிகு உறுப்பினரவர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11-35

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து

திரு. எஸ்.டேனியல்ராஜ்: ஹவாலா பிரச்சினையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டேனியல் ராஜ், எதுவும் என்னிடம் நீங்கள் கொடுக்கவில்லை. கொடுக்காமல் நீங்கள் எடுத்திருப்பது எப்படி முறையாகும்? ஹவாலா மோசடி பற்றி பேச வேண்டும் என்றால் அங்கே போய்ப் பேசுங்கள். நீங்கள் இங்கே பேச வேண்டும் என்றால் என்னிடம் அனுமதி கோரி என்ன கொடுத்திருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள் (குறுக்கீடுகள்) திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மூத்த உறுப்பினரே, கடைசி நாள்-முறைகேடாக நடந்து, "வெளியேற்றுங்கள் சார்" என்று சொல்வதெல்லாம் முறையா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. டேனியல்ராஜ் நீங்கள் என்னிடம் என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) என்னிடம் அனுமதி கோரி எழுத்துமூலம் என்ன கொடுத்திருக்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதற்கு அறையிலேயே சொல்லியிருக்கிறேனே. அறையிலேயே கேட்டீர்கள், அறையிலேயே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் வேண்டாம். அதை இங்கே எழுப்ப முடியாது. நான் உங்களுக்கு அறையிலேயே சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) அடுத்த பிரச்சினைக்கு வாருங்கள்.